## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.22/2021

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 08 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 08.11.2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்துல் வாஹிது | ஜாதி | : | |
| த/பெயர் | : | மதார்கனி | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனது குடியிருப்பு வீடு திருக்கொள்ளிக்காடு கிராமத்திலுள்ளது. தாவா சொத்து சின்னகுருவாடியிலுள்ளது. எனது வீட்டிற்கும் தாவா சொத்துக்கும் இடையே சுமார் 1 கி.மீ. தூரம் இருக்கும் சின்னகுருவாடி கிராமத்தில் தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இல்லை. நான் தாவா சொத்தை கிரையம் கொடுத்து வாங்கினேன் என்றால் சரிதான். எந்த வருடம் வாங்கினேன் என்றால் கடந்த 1989 ல் வாங்கினேன். அதற்கான கிரைய பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. அதை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். (சாட்சி மீண்டும் அது கிரைய பத்திரம் அல்ல என்றும், எழுதிக்கொடுக்கப்பட்டது தான் என்று கூறி சாட்சியம் அளிக்கிறார்)

2. நாரயணசாமி ஐய்யர் என்பவரால் எழுதிக்கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த தேதி, மாதம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரியாக ஞாபகமில்லை. கடந்த 1989 பிற்பாடு எனக்கு கொடுத்த சொத்தை கிரையம் செய்து கொடுக்க சொல்லி அறிவிப்பு நாரயணசாமி ஐய்யருக்கு அனுப்பினேனா என்றால் கடந்த 2013-ல் நீதிமன்றத்தின் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன்.அந்த அறிவிப்பை நாரயணசாமி ஐய்யர் பெற்றுக்கொண்டாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

3. எனது மனைவி வீட்டில் உடல் நலம் சரியில்லாமல் உள்ளார். எதனால் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் அவருக்கு இதய நோய்

உள்ளது. எனது மனைவிக்கு இதய நோய் உள்ளதற்குண்டான மருத்துவ ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவியை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்தால் என்னால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு பொய்யானது என்பது தெரியவந்துவிடும் என்பதால் அவரை சாட்சியம் அளிக்க அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல.

4. நாரயணசாமி ஐய்யர் தகப்பனார் பெயர் சாமிநாத ஐய்யர். தாவா சொத்து ஏற்கனவே நாரயணசாமி ஐய்யருக்கும் அவரது தகப்பனாருக்கும் சொந்தமானது என்றால் சரியல்ல. நாரயணசாமி ஐய்யருக்கு மட்டும் சொந்மானது ஆகும். நாரயணசாமி ஐய்யரும், சாமிநாத ஐய்யரும் எங்கு தங்கியிருந்தார்கள் என்றால் நான் சொத்து வாங்கும்போது மன்னார்குடியிலும், தற்போது மன்னார்குடியிலும் சென்னையிலும் மாறி, மாறி இருந்து வருகிறார்கள். மன்னார்குடியில் கீழவீதி முதல் தெருவில் வசித்து வருகிறார்கள்.

5. கடந்த 1989 ல் நாரயணசாமி ஐய்யர் எழுதிக்கொடுத்தற்கு பின்னிட்டு, 2013 வழக்கு தாக்கல் செய்யும் வரை ஏன் கிரைய சாசனம் செய்து கொடுக்க சொல்லவில்லை என்றால் நான் சென்று கேட்டபோது நாரயணசாமி ஐய்யரின் மனைவி இருந்தார். அவர் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதால் 2013 ல் வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கை தாக்கல் செய்தவற்கு பின்பு நாரயணசாமி ஐய்யரை சென்று பார்த்தேனா என்றால் இல்லை. அவரது மனைவியையும், அவரது பிள்ளைகளையும் பார்த்தேன்.

6. கடந்த 2013-ல் வழக்கு தாக்கல் செய்தபோது நாரயணசாமி ஐய்யர் மற்றும் சாமிநாத ஐய்யரையும் நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் நாரயணசாமி ஐய்யரின் மனைவியை தான் பார்த்தேன். கடந்த 2013-ல் நாரயணசாமி ஐய்யரும், சாமிநாத ஐய்யரும் உடயிருடன் தான் இருந்தார்களா? இல்லையா? என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பது பற்றி தெரியாமல் எப்படி அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நான் நாரயணசாமி ஐய்யரின் மனைவியை பார்த்தபோது அவர் சொன்னதன் அடிப்படையில் தான் 2013 ல் வழக்கு தாக்கல் செய்தேன். அவரை ஏன் வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதற்கு தனிப்பட்ட காரணம் இல்லை.

7. நான் 2013 வழக்கு தாக்கல் செய்தவற்கு பல வருடங்களுக்கு முன்பாகவே நாரயணசாமி ஐய்யர் மற்றும் அவரது தகப்பனார் சாமிநாத ஐய்யர் இருவரும்

இறந்துவிட்டார்கள் என்றாலும், இறந்த நபர்கள் மீது நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நாராயணாசாமி மற்றும் அவரது தகப்பனார் சாமிநாத ஐய்யர் இருவரும் எந்த வருடம் மன்னார்குடியில் இருந்தார்கள் என்பதற்குண்டான வாய்மொழி சாட்சியங்களையோ, ஆவண சாட்சிகளையோ முன்னிலைப்படுத்தமுடியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்து இந்த நீதிமன்றத்தை ஏமாற்றி எனக்கு ஆதரவாக உத்தரவு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான வழக்குமூலத்தை தயார் செய்து கடந்த 2013 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்? சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2024.11.08 19:13:06 +0530

District Munsif

Mannargudi.